# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 97/2024**

Deposition of Witness of PW8

| | | | |
|---|---|---|---|
| Name | : தீபா | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 14 ஜூலை 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்சமயம் திருச்செங்கோடு ஊரக காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.08.2021 ம் தேதி நான் மொடக்குறிச்சி காவல்நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது மொடக்குறிச்சி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் ஜெயரத் அவர்கள் முதல் புலன் விசாரணை முடித்து தொடர் புலன் விசாரணைக்கு எனது பார்வைக்கு வைத்த மொடக்குறிச்சி காவல்நிலைய குற்ற எண்.158/2021 வழக்கு கோப்பினை பார்வையிட்டு நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் 20.08..2021 ம் தேதி இவ்வழக்கின் சம்பவ இடமான ஈரோடு டூ கரூர் மெயின் ரோடு சாவடிப்பாளையம் HP பெட்ரோல் பங்க் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டதில் சம்பவ இடமானது சார்பு ஆய்வாளர் ஜெயரத் தயார் செய்த பார்வை மகஜர், மாதிரி வரைபடத்தில் கண்டுள்ளவாறு அமைந்திருந்ததால் நான் தனியாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் ஏதும் தயார் செய்யவில்லை. சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த சாட்சிகள் சரஸ்வதி, குப்பாயி, புவனேஷ், சுரேஷ், சக்திவேல், செல்வகுமார், மதன்குமார், குழந்தைவேல், குணசீலன் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்ததில் அவர்கள் சார்பு ஆய்வாளர் ஜெயரத் அவர்கள் விசாரணையில் கூறியவாறே எனது விசாரணையிலும் கூறியதால் நான் தனியாக அவர்களது வாக்குமூலத்தை பதிவு செய்யவில்லை.

3. 20.08.2021 ம் தேதி எதிரி ஓட்டி சென்ற வாகனமான TN 33 BH 4449 ேஹாண்டா இன்டிகான் இருசக்கர வாகனத்தை வாகன தணிக்கை செய்த ஈரோடு கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கதிர்வேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.07.14 18:05:04 +0530

பெற்றேன். **அந்த** TN 33 BH 4449 வாகனத்தின் **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. அன்றைய தினமே இவ்வழக்கில் இறந்துபோன முத்தம்மாள் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த திருச்சி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர் கார்த்திகேயன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் காயம்பட்ட சரஸ்வதி, குப்பாயி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த ஈரோடு லோட்டஸ் மருத்துவமனை மருத்துவர் ஜான்குருபாதம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ்கள் பெற்றேன். **அந்த காயச்சான்றிதழ் (குப்பாயி) அ.சா.ஆ.8 ஆகவும், காயச்சான்றிதழ் (சரஸ்வதி) அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 20.08.2021 ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி குமரவேல் மீது சட்டபிரிவுகள் 279, 304A இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

மோட்டார் வாகன ஆய்வறிக்கை, பிரேத பரிசோதனை அறிக்கை, காயச்சான்றிதழ்கள் ஆகியவற்றை அரசு தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யும் பொருட்டு அரசு தரப்பில் பிரிவு 294(3) குவிமுச ன்படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டது.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.07.14 18:05:09 +0530